IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 282/2008 |
| | | P/W's | : | PW3 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | S. சங்கர் | CASTE | : | |
| S/O. | S. செருவக்கோனார் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | அய்யங்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.03.2025**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது தகப்பனாரின் பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினைப்பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி அசல் பாகப்பிரிவினைப்பத்திரம் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்ய நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதியும், வா.சா.2 முருகேசன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளதால் சாட்சி சொல்ல வந்தேன். வா.சா.ஆ.16 பத்திரம் பதிவு செய்யப்படாததால் அதில் கட்ட வேண்டிய குறைந்த முத்திரைத்தொகையையும் அதன் அபராதத்தையும் நான் செலுத்தவில்லை. மேற்படி முத்திரைத் தொகையையும், அதன் அபராதத்தையும் யார் கட்டியது என்று எனக்குத்தெரியாது.

2. வா.சா.ஆ.16 ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் அதில் சொல்லப்பட்டுள்ள தரப்பினர்களின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் A Schedule ல் காட்டப்பட்டுள்ள 6 அயிட்ட சொத்துக்களை எனது தந்தை செருவக்கோனார் தனிப்பட்டு அடைந்ததாகவோ, அனுபவித்தாகவோ, அவர்பெயரில் தனிப்பட்டு பட்டா ஏற்பட்டதாகவோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.16 ஆவணத்தில் B Schedule ல் உள்ள 2 அயிட்ட சொத்துக்களை குப்பையா கோனார் அடைந்ததாகவோ, அனுபவித்தாகவோ, அவர்பெயரில் தனிப்பட்டு பட்டா ஏற்பட்டதாகவோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.16 ஆவணத்தில் C Schedule ல் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதி பெரியசாமி அடைந்ததாகவோ, அனுபவித்தாகவோ, அவர்பெயரில் தனிப்பட்டு பட்டா ஏற்பட்டதாகவோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.16 ஆவணத்திலுள்ள 3 முத்திரைத்தாள்களிலும் அதன் வரிசை எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் A Schedule ல் 1 அயிட்டச்சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்குத்தெரியாது. மேற்படி A Schedule ல் 2 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் எனது கைவசம் உள்ளது. சர்வே எண் 361/2 தற்போது சர்வே எண் 361/2A. 361/2B என தற்போது பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி சர்வே எண்கள் 361/2A. 361/2B களில் தனித்தனியாக எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. சர்வே எண் 361/2A தற்போது வருவாய் ஆவணங்களில் கலையரசன் மனைவி சகுந்தலா பெயரில் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. சர்வே எண் 361/2B தற்போது வருவாய் ஆவணங்களில் தின்னார் மகன் கோட்டைச்சாமி பெயரில் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

7. சர்வே எண்கள் 361/2A. சகுந்தலாவிற்கும், 361/2B கோட்டைசாமிக்கும் எப்படி கிடைத்தது என்று எனக்குத்தெரியாது. மேற்படி சர்வே எண்களின் தற்போதைய உரிமையாளர்கள் பற்றி நான் தெரிந்துகொண்டே வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் A Schedule ல் 6 வது அயிட்ட சொத்திற்கான சர்வே எண். 337/7B என்பது 337/7B2A, 337/7B2B, 337/7B2C, 337/7B2D என பிரிந்துள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

8. வா.சா.ஆ.16 பத்திரத்தில் சர்வே எண் 337/7B க்கு 12 செண்ட் மட்டுமே விஸ்தீரணமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 337/7B நான்காக பிரிக்கப்பட்ட விவரத்தை நான் தெரிந்து கொண்டே வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. மேற்படி பத்திரத்தில் A Schedule சொத்து விவரத்திற்கு கீழே எனது தகப்பனார் செருவக்கோனார், பெரியசாமிக்கு ரூ.12,000/- ரொக்கம் செலுத்திவிட்டு மேற்படி A Schedule ல் கண்ட சொத்துக்களில் வடபுறம் உள்ள 45 செண்டை அனுபவித்துக்கொள்ளவேண்டியது என்றும், மேற்படி ரூ.12,000 த்தை செலுத்த தவறினால் A Schedule ல் கண்ட சொத்தில் வடபுறம் 45 செண்டை பெரியசாமி சொந்த உழவடை சுவாதீனத்தில் ஒப்படைத்து விடவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. மேற்சொன்னவாறு ரூ.12,000 த்தை எனது தகப்பனார் பெரியசாமிக்கு கொடுத்துவிட்டார், மேற்படி தொகை செலுத்தியதற்கான ரசீதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. B Schedule ல் உள்ள இரண்டு அயிட்ட சொத்துக்களும் எனது அனுபவத்தில் உள்ளன, அதற்கான வருவாய் ஆவணங்கள் எனது சித்தப்பா குப்பையா கோனார் பெயரில் உள்ளன. குப்பையா கோனார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

11. B Schedule ல் 2 வது அயிட்ட சொத்தில் உள்ள வீடு யாருடைய புழக்கமும் இல்லாமல் இடிந்து போய் உள்ளது. குப்பையா கோனார் மனைவி இறந்துவிட்டார். குப்பையா கோனாருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. குப்பையா கோனாரின் சொத்துக்கள் பெரியசாமி கோனாரின் வாரிசுகள் மற்றும் எனது தகப்பனார் செருவக்கோனாரின் வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது.

12. குப்பையா கோனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நான் உட்பட செருவக்கோனாரின் வாரிசுகளும், பெரியசாமி கோனாரின் வாரிசுகளும் இதுவரை பிரித்துக்கொண்டோமா என்றால் இதுவரை பிரித்துக் கொள்ளவில்லை.

13. வா.சா.ஆ.16 ல் C Schedule சொத்தாக ரீ சர்வே எண் 427/1 ல் 1 ஏக்கர் 16 செண்ட் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் தற்போதைய வருவாய் துறை ஆவணங்கள் படி 60.5 செண்ட் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 60.5 செண்ட் இன்றையதேதியில் வருவாய் ஆவணங்களின்படி எனது தந்தை செருவக்கோனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்படி 60.5 செண்டை பிரதிவாதிகள் தான் இன்றைய தேதி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

14. ரீ சர்வே எண் 427/7 ல் 55.5 செண்ட் வருவாய் துறை ஆவணங்களில் இன்றைய தேதியில் எனது தகப்பனார் செருவக்கோனார் பெயரில் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. சர்வே எண் 427/7 ல் 55.5 செண்டை இன்றைய தேதி வரை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

15. சர்வே எண் 361/4 ல் உள்ள 8.5 செண்டு எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி 8.5 செண்ட் சொத்தைப்பற்றி வா.சா.ஆ.16 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் எனக்குத்தெரியாது.

16. வழக்குச்சொத்தில் தென்னைமரங்களும், வேறு பல மரங்களும் உள்ளன என்றால் சரிதான். மேற்படி மரங்களை முதலில் பெரியசாமியும் அதன்பிறகு 2 முதல் 7 பிரதிவாதிகளும் நட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்டு வீடு உள்ளது, 2 போர்வெல் உள்ளன, 4 ம் பிரதிவாதி பெயரில் மின்இணைப்பு உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்தில் மேற்சொன்னவாறு வீடு, போர்வெல்

மற்றும் மின்இணைப்பு பற்றி நான் தெரிந்து கொண்டே வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17. வா.சா.ஆ.16 ஆவணத்தின்படி எந்தவித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பெரியசாமி என்ற கையொப்பம் 1ம் பிரதிவாதி பெரியசாமி இட்ட கையொப்பமில்லை என்றால் அதுப்பற்றி எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.16 ஆவணத்தின்படி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணத்தை வழக்கிற்காக வாதி மற்றும் முருகேசன் வகையறாவுடன் சேர்ந்துகொண்டு நான் ஆவணத்தை உருவாக்கி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல,

18. குப்பையா கோனார் பேரன் V செருவக்கோனார் வாரிசுகளுக்கும், குப்பையாகோனார் மகன் சடையாண்டி கோனார் வாரிசுகளுக்கும் 1983ல் இறுதியாக நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினைப்பற்றி நான் தெரிந்துகொண்டே நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும் முருகேசனும் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.